# DEPOSITION OF WITNESS

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 47/2024**

**Prosecution witness : அ.சா. 6 Date : 15.09.2025.**

| Name : செல்வமணி | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused present. ) A2 absent petition filed and allowed.**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தோரமங்கலத்தில் குடியிருந்து ஒப்பந்த வேலை செய்கிறேன். அ.சா.1 யை எனக்கு தெரியும். எதிரிகளை எனக்கு தெரியாது. கடந்த 2022 ம் வருடம் அ.சா.1 யை யாரோ அடித்ததாக சொன்னார்கள். வேறு ஒன்றும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை-**

2) கடந்த 16.01.2021 ம் தேதி மாலை 06.30 மணியளவில் அ.சா.1 ஜலகண்டாபுரத்திலிருந்து வீட்டிற்கு வந்து கொண்டிருந்த போது முனியப்பன் கோவில் அருகே அ.சா.1 பயன்படுத்திவரும் நிலத்தில் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்த போது அ.சா.1 ன் மீது பந்து பட்டதால் அதை கேட்ட அ.சா.1 யை எதிரிகள் அருண், கோபி இருவரும் அ.சா.1 யை கெட்ட வார்த்தையால் திட்டி, எதிரி அருண் கையால் அ.சா.1 ன் நெஞ்சின் மீது அடித்து கீழே தள்ளியதாகவும்,

எதிரி கோபி கிரிக்கெட் மட்டையால் வாதியின் தலையின் மீது அடித்ததாகவும், இரண்டு எதிரிகளும் அ.சா.1 யை கொலை மிரட்டல் விடுத்ததை நேரில் பார்த்ததாக சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. நானும், எதிரிகளும் சமாதானம் ஆகிவிட்டோம் என்றால் சரிதான். சம்பவத்தை நேரில் பார்த்து விட்டு தற்பொழுது எதிரிகளுக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.